புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

● மலர்: 01 ● இதழ்: 245 ● 11-03-2026 ● புதன் ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி
● Volume 01 ● Issue: 245 ● 11-03-2026 ● Wednesday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry

# 3 ஈரான் போர்க் கப்பல்களை இந்தியாவில் நிறுத்த அனுமதி அளித்தோம்:

## மாநிலங்களவையில் அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு



புதுடெல்லி: மார்ச்.11–

ஈரானின் 3 போர்க் கப்பல்களை இந்திய துறைமுகத்தில் நிறுத்த அனுமதி வழங்கப்பட்டது என வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

இந்தியாவில் கடற்படை கூட்டு பயிற்சியில் பங்கேற்று விட்டு ஈரான் திரும்பிய ஐஆர் ஐஎஸ் தேனா என்ற போர்க்கப்பலை, அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் இந்தியப் பெருங்கடல் பகுதியில் தாக்கி அழித்தது. இதுகுறித்து இந்தியா மவுனம் காப்பது ஏன் என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

இந்நிலையில் ஈரான் போருக்குப்பின் நடந்தது என்ன, இந்தியா எடுத்த நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று கூறியதாவது: ”ஈரான் மீது கடந்த மாதம் 28ம் தேதி நடைபெற்ற தாக்குதல், அதைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் மிகுந்த கவலையளிக்கிறது.

இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச கடற்படை கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க 3 ஈரான் போர்க் கப்பல்கள் கடந்த மாதம் வந்தன. அவற்றை இந்திய துறைமுகங்களில் நிறுத்த ஈரான் கடந்த 28ம் தேதி அனுமதி கோரியது. இதற்கு மார்ச் 1ம் தேதி இந்தியா அனுமதி வழங்கியது.

இதையடுத்து ஐஆர்ஐஎஸ் லவான் என்ற கப்பல் கொச்சியில் கடந்த மார்ச் 4ம் தேதி நிறுத்தப்பட்டது. அதில் உள்ள கடற்படை வீரர்கள், இந்திய கடற்படை முகாமில் தங்கியுள்ளனர். இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் ஐஆர்ஐஎஸ் தேனா என்ற போர்க்கப்பல்லை அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் டார்பிடோ குண்டு மூலம் தாக்கி அழித்தது. மற்றொரு ஈரான் போர்க் கப்பல் ஐஆர் ஐஸ் பூஷர் கப்பல் தங்கள் துறைமுகத்தில் நிறுத்திக் கொள்ள இலங்கை அனுமதி அளித்தது. அதில் இருந்த 208 வீரர்களும் இலங்கை கடற்படை முகாமில் உள்ளனர்.

இந்தியர்களுக்கு உதவி:

ஈரான் போர் காரணமாக மேற்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் சுமார் 1 கோடி இந்தியர்களின் பாதுகாப்பில் மத்திய அரசு அக்கறை செலுத்துகிறது. ஈரானின் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், கத்தார், பஹ்ரைன் ஆகிய நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களுக்குத் தேவையான உதவியை இந்திய தூதரக அதிகாரிகள் செய்து வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை மேற்கு ஆசிய நாடுகளில் இருந்து 67,000 இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதலும் கவலையளிக்கிறது. இதில் இந்தியர்கள் அதிகம் பணியாற்றுகின்றனர். ஏற்கெனவே நாம் 2 இந்திய மாலுமிகளை இழந்து விட்டோம். ஒருவரை காணவில்லை. ஈரானுக்கு இந்திய மாலுமிகளை அனுப்ப வேண்டாம் என கப்பல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஈரான் அமெரிக்கா போர் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வர வேண்டும் எனவும், அதுகுறித்த முயற்சிக்கு இந்தியா ஆதரவளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ‘எரிவாயு தட்டுப்பாடுக்கு மாற்று ஏற்பாடு செய்வீர்’

## பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்




சென்னை: மார்ச்.11–

வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘அமெரிக்கா ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நேற்று விரிவாக ஆய்வு செய்தேன்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்திட வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய, மாநில அரசுகளுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்:

இதனிடையே, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, “ஈரான் இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக பெட்ரோலிய பொருட்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக வணிக மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. எல்பிஜிக்கு மாற்றாக வேறு எரிபொருளை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், மக்களிடையே இதை வைத்து தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வேலைகளை விடுத்து, தமிழகத்தில் உணவகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான எரிவாயு ஏற்பாடுகள் மற்றும் சலுகைகளை பொறுப்புள்ள மாநில அரசாக செய்து தர வேண்டும் எனவும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மா உணவகங்களை மேலும் முழு வீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.


திண்டுக்கல் மாவட்டம் – அய்யலூர் முதல்நிலைபேரூராட்சி

2026–2027–ம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பு

ந.க.எண்.42/2026 நாள் 06.03.2026

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் முதல்நிலை பேரூராட்சியின் குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகியவற்றின் பொருட்கள் சப்ளை செய்தல் 2026–2027ம் ஆண்டிற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலர்அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 13.03.2026ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பணிவாரியான ஒப்பந்தபுள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கலாம். மேற்படி இணையதளத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13.03.2026ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தபுள்ளி கொடுக்கும்பொழுது அதற்குரிய டேவணி தொகையினை இணைய வழி செலுத்திடவும், மேலும் இதர விபரங்களை அலுவலக நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுக் தெரிந்துகொள்ளலாம்.

| வ. எண் | விபரம் | உத்தேச தேவை மதிப்பு (ஆண்டுக்கு) ரூ. | செலுத்த வேண்டிய டேவணி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக பராமரிப்பு உதிரி உபகரணங்கள் விநியோகம் செய்தல். | 10,00,000 | 10,000 |
| 2. | பொது சுகாதார பொருட்கள் மற்றும் தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் | 10,00,000 | 10,000 |

(ஒம்) திரு.இரா.கருப்பன்,
தலைவர்
அய்யலூர் முதல்நிலை பேரூராட்சி

(ஒம்) திருமதி.கு.பத்மலதா,
செயல் அலுவலர்
அய்யலூர் முதல்நிலை பேரூராட்சி

செயல் அலுவலர்,
அய்யலூர் முதல்நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.


# ரூ 5.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டத்தினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்

விழுப்புரம், மார்ச். 11–

ரூ 5.79 கோடி மதிப் பீட்டில் கட்டப்பட்ட புதிய செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஒருங் கிணைந்த ஒப்படைக் கப்பட்ட வருவாய் இனம் திட்டத்தின் கீழ் 5 கோடியே 79 லட்சத்தி 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சிநடைபெற்றது.





இந்த புதியகட்டிடத் தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சிமூலம் திறந்து வைத்தார். இதை அடுத்து புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் பத்மஜா தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ,ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் குத்து விளக்கேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் கண்ணன், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ் சேரிகணேசன், செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமுதவள்ளி, ராமதாஸ், உதவி செயற்பொறியாளர் முகமதுயாசின் உதவிபொறியாளர்கள் நாராயணசாமி தண்டபாணி ரஞ்சித் கற்பகம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரபாண்டியன், காஞ்சனா, சசிகலா, அபிராமி உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலை வர்கள் ,பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழக துணை முதல்வர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13 ந்தேதி நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதையொடடி முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாட்ட வழங்கல் அலுவலர் கீதா ராணி, தனித்துணை ஆட்சியர் அபிநயா மற்றும் கூடுதல் ஆட்சியர்கள் , துணை ஆட்சியர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## அரியலூர் நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் மெயிலில் வந்ததன் எதிரொலியாக மோப்பநாய் பிரிவு போலீசார் சோதனை செய்தனர்

அரியலூர், மார்ச்.11–

அரியலூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு இன்று 10.03.26 <alex...paul..menon@outlook.com> என்ற மெயில் ஐடியில் இருந்து <alu.pdc.tn@indian courts nic.in<alu.pdc.tn@indian courts nic.in> என்ற மெயில் ஐடிக்கு Justice for Nanguneriஉங்கள் நீதிமன்றம் நீதிபதி அறைகளில் 5 சயனைடு வாயு நிரப்பப்பட்ட விஷ குண்டுகள் வெடிக்க உள்ளன. ஊழியர்களை (வாய் மற்றும் மூக்கு மூடி) பிற்பகல் 1.10 மணிக்குள் வெளியேறுங்கள் என்ற தலைப்பில் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது இதனை அடுத்து அரியலூர் நீதிமன்ற அலுவலகத்தின் மெயில் ஐடிக்கு மிரட்டல் வந்ததை அடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி அரியலூர் மாவட்ட வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலிசார் சோதனை செய்து வருகிறார்கள். இதனால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பான சூழல் காணப்படுகிறது

## தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டி கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு




கிருஷ்ணகிரி, மார்ச். 11–

கிருஷ்ணகிரி மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைநகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கோரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இன்று மனு அளிக்கப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் முரளி விஜய்,

வேந்தர்கர்சன், சுரேஷ், தலைமையில், மாநில, மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் திரளாகச் சென்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து இந்த மனுவை வழங்கினர்.

அந்த மனுவில், தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வலியுறுத்தியும், மாநிலம் முழுவதும் அதிகரித்து வரும் போதைப்பொருள் புழக்கம் மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை அரசு கட்டுப்படுத்தத் தவறியதைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத் தலைநகரில் உரிய பாதுகாப்புடன் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின் போது கட்சி நிர்வாகிகள் பலரும் உடனிருந்து, தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த ஜனநாயக வழிப் போராட்டம் அமையப் போவதாகத் தெரிவித்தனர்.

# பிறந்தநாள் விழா



கிருஷ்ணகிரி, மார்ச். 11–

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூரில் உள்ள தமிழக வாழ்வுரிமை கட்சியின் அலுவலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட மண்டலச் செயலாளர் நெப்போலியன் அவர்களின் பிறந்தநாள் விழா அக்கட்சியினரால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வையொட்டி, கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்த மண்டலச் செயலாளர் நெப்போலியன் அவர்களுக்கு, மத்தூர் ஒன்றிய மற்றும் நகரப் பொறுப்பாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். விழாவின் முக்கிய நிகழ்வாக, நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் புடைசூழ பிரம்மாண்டமான பிறந்தநாள் கேக்கை நெப்போலியன் அவர்கள் வெட்டினார். அப்போது அங்கு கூடியிருந்த தொண்டர்கள் கரகோஷம் எழுப்பி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அவருக்கு 100 ரூபாய் நோட்டுகளால் கோர்க்கப்பட்ட ரூ.10,000 மதிப்பிலான பிரம்மாண்ட பணமாலையை மத்தூர் பகுதி நிர்வாகிகள் அணிவித்து, மலர் மாலைகள் மற்றும் பொன்னாடைகள் போர்த்தி கௌரவித்தனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, கட்சி அலுவலகத்தின் முன்பு திரண்ட தொண்டர்கள் வானவேடிக்கை மற்றும் பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பொதுமக்களுக்கு இனிப்புகளையும், வழங்கி பிறந்தநாள் கொண்டாட்டத்தை உற்சாகமாகக் கொண்டாடினர்.

இந்த விழாவில் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கட்சி அலுவலகமே விழாக்கோலம் பூண்டிருந்தது குறிப்பிடத்தக்கது

## திருவள்ளூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து 500 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன



திருவள்ளூர் மார்ச் 11 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் நடைபெற்றது.மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும்500மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலரிடம் வழங்கினர். இதில்,நிலம்சம்பந்தமாக48 மனுக்களும், கலைஞர் மகளிர் உரிமை தொகை சம்பந்தமாக63மனுக்களும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 63 மனுக்களும் வேலைவாய்ப்பு வேண்டி 48 மனுக்களும் பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி 27 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 251 மனுக்கள் என ஆக மொத்தம் 500 மனுக்கள் பெறப்பட்டன.

இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அறிவுறுத்தினார்.முன்னதாக, மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திற னாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் வெங்கடேசன், உதவி ஆணையர் (கலால்) கணேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார், துணை ஆட்சியர் பயிற்சி) செ.சண்முக பிரீத்தா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் அதிர்ச்சி காவல்துறையே சட்டவிரோத மது விற்பனைக்கு உடந்தையா? டிடிவி தினகரன் கேள்வி.

சேலம் மாவட்டம் மேச்சேரியில் சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்க வேண்டிய காவல்துறையினரே அதற்கு உடந்தையாகச் செயல்படுவதா?என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:



சேலம் மாவட்டம் மேச்சேரி காவல் நிலையத்தின் அருகிலேயே திமுக நிர்வாகிகளும், அவர்களது ஆதரவாளர்களும் பெட்டிக் கடையின் மூலம் போட்டிப் போட்டு சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்து வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதே மேச்சேரி பேருந்து நிலையத்தின் அருகே சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்ததாகக் கைது செய்யப்பட்ட திமுக நிர்வாகி ஜாமீனில் வெளிவந்து காவல்துறையினரின் ஆதரவோடு மீண்டும் அதே சட்டவிரோத மதுவிற்பனை செய்து வருவதாகவும் புகார் எழுந்துள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், சட்டத்திற்குப் புறம்பாகவும் நடைபெறும் மதுபான விற்பனையைத் தடுத்து நிறுத்த வேண்டிய காவல்துறையினரே அதற்கு உடந்தையாக இருப்பதும், பொதுமக்கள் புகார் அளித்த பின்பும் நடவடிக்கை எடுக்க மறுப்பதும் கடும் கண்டனத்திற்குரியது. எனவே, சேலம் மேச்சேரி பேருந்து நிலையம் மற்றும் காவல்நிலையம் அருகே சட்டவிரோதமாக நடைபெறும் மது விற்பனையைத் தடுத்து நிறுத்திடுவதோடு, அத்தகைய செயல்களுக்கு உடந்தையாக இருக்கும் காவல் அதிகாரிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மகளிர் தினத்தை முன்னிட்டு திருப்பூரில் தாய்மார்களுடன் குழந்தைகள் ஸ்கேட்டிங் விழா!!



திருப்பூர்15. வேலம்பாளையம் சாலையில் உள்ள ஜே எஸ் ஏ ஸ்கேட்டிங் அகாடமியில் மகளிர் தினத்தை முன்னிட்டு சிறப்பு ஸ்கேட்டிங் நிகழ்ச்சி அகடமி உரிமையாளர் ஜோதி பாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஸ்கேட்டிங் பயிற்சி பெறும் குழந்தைகளின் தாய்மார்கள் கலந்து கொண்டு, எந்தவித முன் பயிற்சியும் இன்றி முதல்முறையாக தங்கள் குழந்தைகளுடன் ஸ்கேட்டிங் செய்து உற்சாகமாக பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து குழந்தைகள் லிம்போ ஸ்கேட்டிங் நிகழ்ச்சியில் ஈடுபட்டனர். இதில் லிம்போ ஸ்கேட்டர்ஸ் ஆராத்யா.நிவிஷா. சிறப்பு விருந்தினராக டீ பள்ளி சார்பில் டோரத்தி. நாச்சியார் பாடசாலை சார்பில் சிவ சரண்யா சண்முகம். செஞ்சுரி மெட்ரிக் பள்ளி சார்பில் ஹெப்சிபா பால் மற்றும் பெற்றோர்கள் குழந்தைகள் ஆர்வத்தோடு பங்கேற்றனர்.

## தமிழக வெற்றிக் கழகத்தின் அடிப்படை தொண்டரின் அதிரடி முயற்சி மாவட்ட செயலாளர் ராஜ்குமாரை வியக்க வைத்த தவெக தொண்டன்!!



கோவை :மார்ச் 11

தமிழக அரசியலில் தடம் பதித்து வரும் தமிழக வெற்றிக் கழகம், தற்போது கோவையில் நடைபெற்ற "பைக் விழிப்புணர்வு மாரத்தான்" பேரணி மூலம் ஒட்டுமொத்த கோவை மாவட்டத்தையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்த நிகழ்ச்சியை தவெகவின் அடிப்படை தொண்டரான ஏ.ஆர்.ரீகன் (A.R.Reegan) என்பவர் முன்னெடுத்து மாபெரும் மாரத்தான் நிகழ்வாக மாற்றிக் காட்டியுள்ளார்.

கோயம்புத்தூரில் மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர் பாதுகாப்பு, புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் "Queen on Roads: Breaking Barriers – Awareness on Wheels" என்ற சிறப்பு மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு ராலி காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இந்த ராலியானது கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள பரியல் மைதானத்தில் துவங்கியது. இதனை தவெகவின் கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் வி. ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழிப்புணர்வு ராலியை துவக்கி வைத்தார். இந்த ராலியானது, ஆர். எஸ் புரத்தில் இருந்து துவங்கி அங்கிருந்து பெண்கள் பைக் ராலி மூலம் நகரில் விழிப்புணர்வு பரப்பி தொண்டாமுத்தூர் பகுதிவரை சுமார் 16 கிலோ மீட்டர் வரை நிறைவு செய்தனர்.

இந்த நிகழ்வு மூலமாக Intern ational Women's Dayகொண்டாட்டத்தில் பெண்கள் பாதுகாப்பு முன்னேற்றம் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு ஆரம்ப கட்ட கண்டறிதல் மற்றும் போதைப்பொருளுக்கு எதிராக 'Say No to Drugs' என்ற செய்தியை பொதுமக்களுக்கு கொண்டு சென்றனர். இந்த விழிப்புணர்வு ராலியில் பல பெண்கள் பைக் ரைடர்கள் பங்கேற்றனர். சமூக நலன் கருதி நடத்தப்படும் இந்த நிகழ்வு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

ஏ.ஆர்.ரீகன் அவர்கள் இந்தியாவில் உள்ள நான்கில் இரண்டு மோட்டார் ஸ்போர்ட்ஸ் ரேஸ் டிராக்கில் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடதக்கது. அப்துல் கலாம் உலக சாதனையாளர் புத்தகத்தில் (Kalam's world record) பங்கு பெற்றுள்ளார். மோட்டார் ஸ்போர்ட்ஸில் அதிக அனுபவம் கொண்டவர். இந்த நிகழ்வின் வெற்றியில் பிரதிபலித்தது. வழக்கமான அரசியல் ஊர்வலமாக இல்லாமல், சர்வதேச தரத்திலான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் ஒழுக்கத்துடன் இந்தப் பேரணி நடைபெற்றது.

தவெக தலைவர் தளபதி விஜய் அவர்களின் நற்பெயருக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், கோவையில் ஒரு "அமைதிப் புரட்சியை" இந்த Motorsports நிபுணர் ஏ.ஆர்.ரீகன் நிகழ்த்திக் காட்டி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா முன்னிட்டு மகளிர் குழு பெண்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கல் .



வேலூர் புறநகர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி கருக்கம்பத்தூர் ஊராட்சியில் வேலூர் மாவட்ட அம்மா பேரவை சார்பாக அம்மாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து 28 கிலோ கேக் வெட்டி1000 நபர்களுக்கு சேலை 1000 குளிர்பானங்கள் வழங்கப்பட்டது வேலூர் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் செயலாளர் த. வேலழகன் மற்றும் ஒன்றிய செயலாளர் .ஜெ . நாகராஜ் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் விழாவில் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த புரட்சித்தலைவி அம்மா பேரவை மாவட்ட செயலாளர் வி சொக்கலிங்கம் அவர்கள்.

## திருவள்ளூர் அருகே ஏரியில் மண் குவாரி அனுமதி அளித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் :



திருவள்ளூர் மார்ச் 11 :

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக் கோட்டை அடுத்த சித்தம்பாக்கம் பகுதியில் 200 ஏக்கர் அளவில் பொதுப்பணிக்கு சொந்தமான ஏரியில் இருந்து கடந்த 2024 2025 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சாலை பணிக்காக எல்.என்.டி நிறுவனம் சார்பில் மண் குவாரி எடுத்து சவுடு மண் அள்ளி சென்றனர்.

இதனால் ஏரி சுற்றி வட்டார பகுதியில் உள்ள நிலத்தடி நீர் இல்லாமல் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும், கால்நடைகளும் தண்ணீர் இன்றி தவித்து வருவதால் கிராமத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் கிடைக்காமல் விவசாயம் பொய்த்து போனது. மேலும் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி உள்ளதால் குடிப்பதற்கு கூட முறையான தண்ணீர் இல்லாமல் தவித்து வருவதால் ஏரியில் மீண்டும் சவுடு மண் குவாரிக்கு அனுமதி அளிக்ககூடாது எனக்கூறி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் புகார் அளிக்க வந்தனர்.

தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன்பு அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற அரசு ஆவணங்கள் ஒப்படைக்கும் போராட்டம் மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்திற்கு சென்று மண் குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது எனவும் மீறி அளித்தால் வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் எச்சரித்தனர். இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது.

## சென்னையில் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வதில் சிக்கல்!!

சென்னை: சென்னையில் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. முன்பதிவு மொபைல் எண்கள் not available, switched off என மாறி மாறி வருவதால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். வீட்டு உபயோக சிலிண்டர் தடையின்றி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் முன்பதிவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் G.ராஜா விருப்பமனு



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்காக செஞ்சி ஒன்றிய செயலாளர் நி.ராஜா விருப்ப.மனுவை அளித்தார். சென்னை தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மண்டல செயலாளர் த.ஆனந்த் முன்னிலையில், செஞ்சி தொகுதி செயலாளர் நா.இராசநாயகம் நா.அசோக் மாவட்ட இளைஞரணி செயலாளர் செஞ்சி நகர செயலாளர் விடியோ சரவணன் உள்ளிட்டவர்களிடம் அவர் தனது விருப்ப.மனுவை சமர்ப்பித்தார். செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் கட்சி சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள நி.ராஜாவின் மனு கட்சி நிர்வாகிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டது.





சர்தார் வல்லபாய் பட்டேல் அரசு தொடக்கப் பள்ளி சேதராப்பட்டில் அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் விழா மற்றும் கற்றல் கற்பித்தல் பொருட்களின் கண்காட்சி மற்றும் முன்மழலையர் தினவிழா நடைபெற்றது. பள்ளியின் தலைமையாசிரியை ஹேமமாலினி வரவேற்புரை மற்றும் நோக்கவுரையை வழங்கினார். மாநில திட்ட இயக்குநர் எழில் கல்பனா, சமக்ரா சிக்ஷா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். பள்ளி துணை முதல்வர் உமா வாழ்த்துரை வழங்கினார். விழாவிற்கு ஐந்தாம் வட்ட பள்ளித்துணை ஆய்வாளர் புவியரசன் முன்னிலை வகித்தார். மாநில திட்ட இயக்குநர் எழில் கல்பனா விழாவினை துவக்கி வைத்தார். மாணவர்களின் வாசித்தல் மற்றும் எண்ணறிவு செயல் பாடுகளையும், கற்றல் கற்பித்தல் கண்காட்சியையும், முன்மழலையர்களின் கற்றல் பொருட்களின் கண்காட்சியையும் பார்வையிட்டார். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு புத்தகங்களையும் கேடயங்களையும் வழங்கினர். மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி மேன்மேலும் வளரத் தங்களின் வாழ்த்துகளைக் கூறினர். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். ஆசிரியை கௌசல்யா விழாவை தொகுத்து வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும் ஊழியர்களும் செய்திருந்தனர். இறுதியாக ஆசிரியை சரிதா நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

## புதுச்சேரியில் சிலிண்டர் தட்டுப்பாடு: உணவகங்கள் மூடும் அவலம் : சுற்றுலாப் பயணிகள் தவிப்பு!

புதுச்சேரி: மார்ச். 11–

சர்வதேச அரசியல் சூழல் மற்றும் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் காரணமாக, புதுச்சேரியில் கடும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்களை நடத்த முடியாமல் உரிமையாளர்கள் திணறி வரும் சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்கா ஈரான் இடையேயான போர் பதற்றம் காரணமாக உலகளவில் எரிபொருள் விநியோகத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள்



விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சர்வதேச அரசியல் சூழலின் தாக்கம் தற்போது புதுச்சேரியின் சமையலறைகளை எட்டியுள்ளது. சிலிண்டர் வரத்து கணிசமாகக் குறைந்துள்ளதால், உணவகங்களுக்குத் தேவையான வணிக ரீதியிலான சிலிண்டர்கள் கிடைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை காலங்களில் புதுச்சேரிக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது வழக்கம். தற்போது நிலவும் சிலிண்டர் தட்டுப்பாட்டால்:

பல உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. திறந்திருக்கும் உணவகங்களிலும் போதிய உணவு தயாரிக்க முடியாமல் உரிமையாளர்கள் கைவிரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உணவு கிடைக்காமல் சுற்றுலாப் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இது சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் பரபரப்பையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

உணவக உரிமையாளர்கள் கோரிக்கை

“சிலிண்டர் தட்டுப்பாட்டால் எங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளை நம்பி இருக்கும் இந்த நகரில், அவர்களுக்கு உணவு வழங்க முடியாத நிலை எங்களுக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. மத்திய அரசு உடனடியாக தலையிட்டு, எரிவாயு விநியோகத்தைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

சுற்றுலா மையமான புதுச்சேரியின் நற்பெயரைக் காக்கவும், பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்!!

மதுரை: மார்ச்.11–

மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடந்த ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் மதுரை விமான நிலையத்தை உயர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டது. மதுரை விமான நிலையத்தை மேம்படுத்துவதன் மூலம் தென் தமிழக பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேலம் தீவட்டிப்பட்டி அருகே புள்ளிமான் வேட்டை கள்ளத்துப்பாக்கியுடன் இருவர் கைது.

சேலம் மாவட்டம் ஓமலூர் தீவட்டிப்பட்டி அருகே காப்புக்காடு பகுதியில் கள்ளத்துப்பாக்கியால் புள்ளிமானை வேட்டையாடி கடத்த முயன்ற இருவரை வனத் துறையினர் கைது செய்தனர்.

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டை வனச்சரகத்திற்கு உள்பட்ட பொம்மியம்பட்டி காப்புக்காடு பகுதியில் வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க வனச்சரக களப் பணியாளர்கள் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, வனப்பகுதியின் ஒரு பகுதியில் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருவர் நடமாடிக்கொண்டிருப்பதை வனத் துறையினர்



கண்காணித்து, அவர்களைப் பிடித்து சோதனை செய்தபோது, ஒரு புள்ளிமானை கள்ளத் துப்பாக்கியால் வேட்டையாடி, அதை எடுத்துச் செல்ல முயன்றது தெரியவந்தது.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் தேக்கம்பட்டி பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (25), இரும்பாலை பகுதியைச் சேர்ந்த சங்கர் (30) என்பதும் தெரியவந்தது. இதையடுத்து, அவர்கள் பயன்படுத்திய கள்ளத் துப்பாக்கி, பைக் மற்றும் வேட்டையாடப்பட்ட புள்ளிமானின் உடல் ஆகியவற்றை வனத் துறையினர் பறிமுதல் செய்தனர்.

வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்த வனத் துறையினர், அவர்கள் இருவரையும் கைது செய்து ஓமலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்ற உத்தரவின்படி, கைதான பிரகாஷ், சங்கர் ஆகியோர் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

வனப்பகுதிகளில் அத்துமீறி நுழைபவர்கள் மற்றும் வேட்டையாடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## சின்னதடாகத்தில் ஸ்ரீ ஐஸ்வர்யா மருத்துவமனையின் புதிய கட்டடத் திறப்பு விழா: பத்மஸ்ரீ டாக்டர் ஜி. பக்தவத்சலம் திறந்து வைத்தார்!!



கோவை,மார்ச்:11

கோவை சின்னதடாகம் பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக மருத்துவச் சேவையாற்றி வரும் ஸ்ரீ ஐஸ்வர்யா மருத்துவமனை,நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கே.ஜி மருத்துவமனையின் தலைவர், பத்மஸ்ரீ டாக்டர் ஜி.பக்தவத்சலம் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, புதிய மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். மருத்துவ மனையின் நிறுவனர் டாக்டர் டி.பரமேஸ்வரன் மற்றும் நிர்வாக மற்றும் மனிதவளத் துறைத் தலைவர் பானுப் பிரியா பரமேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடந்த இரண்டு தசாப்தங்களாக இப்பகுதி மக்களுக்கு வழங்கி வரும் சேவையை, இந்த புதிய நவீன கட்டடத்தின் மூலம் இன்னும் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் தொடர உள்ளதாக தெரிவித்தனர்.

விழாவில் கௌரவ விருந்தினர்களாக ஐ.எம்.ஏ தலைவர் தேர்வு டாக்டர் ஏ.கே.ரவிக் குமார்,ஐ.எம்.ஏ அரசு மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் இயக்குநர் டாக்டர்.எஸ்.கார்த்திக் பிரபு ,இ.எஸ்.ஐ மருத்துவக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் டாக்டர் என்.தமிழ் செல்வன்,ஐ.எம்.ஏ கோவை தலைவர் டாக்டர் பி.கோஷல் ராம்,ஐ.எம்.ஏ கோவை தலைவர் தேர்வு டாக்டர் ஆர்.ஸ்ரீ ராமலிங்கம், ஐ.எம்.ஏ நிதிக் செயலாளர் டாக்டர் ஆர்.பால முருகன், தலைமை கட்டிடக் கலைஞர் எஸ்.கண்ணன் மற்றும் சின்னதடாகம் பகுதி உள்ளாட்சிப் பிரதிநிதிகள்,பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் எனப் திரளானோர் கலந்து கொண்டனர்.

புதிய கட்டடத்தில் மகப்பேறு மருத்துவம்,சர்க்கரை நோய் சிகிச்சை,எலும்பு முறிவு சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக் கான நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஐஸ்வர்யா குழுமத்தின் கீழ் செயல்படும் ஐஸ்வர்யா கல்வி ஆலோசனை மையம், பானுப்பிரியா பார்மாசூட்டிக்கல்ஸ் ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களும் விழாவில் பங்கேற்றனர்.

## கிருஷ்ணகிரி ஒசூர் மாநகராட்சியில் சமூக நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் சிறப்பானதொரு இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது



கிருஷ்ணகிரி, மார்ச். 11–

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி சார்பில், சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஒசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சாரதா மஹா லில் இந்த இஃப்தார் பெருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழாவில் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஓய். பிரகாஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவருடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஓசூர் மாநகராட்சியின் முதல் மேயருமான எஸ்.ஏ. சத்யா அவர்களும் பங்கேற்று சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் போது, சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மேயர் ஆகியோர் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள், இஸ்லாமியப் பெருமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் மிகவும் எளிமையாகக் கலந்துரையாடினர். ரமலான் மாதத்தின் முக்கியத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் அவசியம் குறித்துப் பேசிய அவர்கள், அனைவருக்கும் தங்களது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

பல்வேறு சமூகத்தினரிடையே ஒற்றுமையையும், மனிதநேயத்தையும் வளர்க்கும் விதமாக அமைந்த இந்த நிகழ்வு, ஓசூர் பகுதியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதில் மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் திரளான பொது மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் VB G-RAM-G திட்டத்தின் மூலம் 125 வேலை நாட்கள் அமல்படுத்த கோரி தளி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் தளி மத்திய மண்டல் தலைவர் திரு.மார்கண்டேஸ்வர ராவ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் நாராயணன் அவர்கள் சிறப்புரையாற்றினார் உடன் கூட்டணி கட்சிகள் மற்றும் பாஜக நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். தளி தொகுதியின் பல கிராமங்களில் நிலவும் தண்ணீர் , சாலை, மற்றும் தெருவிளக்குகள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கூறி பிடிஓவிடம் மனு அளிக்கப்பட்டது. ஸ்ரீ நாகேஷ் குமார் மாவட்ட துணைத் தலைவர், கிருஷ்ணகிரி மேற்கு தளி தொகுதி அமைப்பாளர் முன்னாள் சட்டமன்ற வேட்பாளர், தளி கிருஷ்ணகிரி மாவட்டம்.

# சர்க்கார் சமக்குளம் பகுதியில் பத்திர பதிவு துறை ஆலுவலகம் திறப்பு விழா!!



கோவை :மார்ச்11

பொது மக்களின் பயன்பாட்டிற்காக கோவை மாவட்டம் சர்க்கார் சமக்குளம் பகுதியில் பத்திர பதிவு துறை அலுவலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி காட்சி மூல மாக திறந்து வைத்தார். இப்பத்திர பதிவு துறை யானது அக்ரஹார சாமக்குளம், கொண்டை யம் பாளையம், இடிகரை, கீரணத்தம், வெள்ளமடை, சர்க்கார் சமக்குளம் உட்பட்ட பகுதிகள் உட்படுத் தப்பட்டதாகும்.

இதில் பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ், துணைப்பதிவுத்துறை தலைவர் பிரபாகர்,தெற்கு தணிக்கை மாவட்ட பதிவாளர் சிவராஜ், கோவை வடக்கு மாவட்ட பதிவாளர்கள் பிரபாவதி, அனுஸ்வாதிகா, சார்கார் சமக்குளம் பதிவாளர் சங்கர்மூர்த்தி,சர்க்கார் சாமகுளம் திமுக ஒன்றிய செயலாளர் சுரேஷ் குமார்,கோவை அதிமுக கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார், பெரியநாயக்கன் பாளையம் பாண்டித் துறை பத்திர ஆலுவலகம் உரிமையாளர் கவிதா மந்திரி, ஸ்ரீவாரிமகால் அரவிந்த், கோவில் பாளையம் GPD சர்க்கரை நோய் சிகிச்சை மையம் டாக்டர். பிரியதர்ஷினி Faira கூட்டமைப்பு மணிகண்டன் ,டாக்குமெண்ட் ரைட்டர் விக்னேஸ்வரி, அகிலா மற்றும் எராளமனோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளாரில் 5 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடத்தை தமிழக முதல்வர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். மேலும் இந்த நிகழ்ச்சியில் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், ஒன்றிய செயலாளர்கள் டிடி.ராதா ப.இளங்கோவன் அ.சுந்தரேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலமுருகன், குப்புசாமி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் உலக மகளிர் தின விழா...!





வந்தவாசி, மார்ச் 11:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் உலக மகளிர் தின விழா ஆசியன் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். துணைத் தலைவர் பா. சீனிவாசன், முகமது அப்துல்லா, எ.தேவா, துணை செயலாளர் க. வாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க துணைச் செயலாளர் சா.ரஷீனா வரவேற்றார்.

சிறப்பு அழைப் பாளராக, பட்டிமன்ற பேச்சாளர் மா. மோகனாம்பாள் பங்கேற்று, சங்க இலக்கியங்களில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மேலும் ஔவையார், காக்கை பாடினியார், வெள்ளி வீதியார் உள்ளிட்டோர் இலக்கியங்களில் தமிழ் மட்டுமே வளர்க்காமல் வாழ்வியல் சிந்தனை களையும் வளர்த்தனர் என்று வலியுறுத்தினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியை ஆ.சித்ரா, அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் விஜயலட்சுமி, சப் இன்ஸ்பெக்டர் சாந்தி ஆகியோர் கருத்துரை களை வழங்கினர். மேலும் 'தமிழை கொண்டாடு வோம்' பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.மேலும் இந்த நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் பெ.பார்த்திபன், சீ.கேசவராஜ், அ.ஷாகுல் அமீது, ஜா.தமீம், இரா. அருள்ஜோதி, ஏ.எஸ். அப்துல் ரஹ்மான், ஆ.முரளி, பா.ஸ்ரீமந்து, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி, தமிழ் ஆர்வலர் கு. சதானந்தன், திரைப்பட இயக்குநர் விஜய் ஆதிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்வை சங்க செயலாளர் இரா. பாஸ்கரன் தொகுத்து வழங்கினார். முன்னதாக ஊடகவியலாளர் வங்கை சு.அகிலன் தமிழிசை பாடல்களை பாடினார். இறுதியில் சங்க துணை தலைவர் வந்தை பிரேம் நன்றி கூறினார்.

# சேலத்தில் ரயில்வே சுரங்கப்பாதையை அடைக்க எதிர்ப்பு.

சேலம் அடுத்த நெய்காரப்பட்டியில் ரயில்வே சுரங்கப்பாதையை அடைக்க எதிர்ப்பு தெரிவித்து, பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

சேலம் மாவட்ட பொதுமக்கள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் நெய்காரப்பட்டி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் திரண்டு வந்து மனு ஒன்றை அளித்தனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில், ''சேலம்ஈரோடு மார்க்கத்தில் நெய்காரப் பட்டியில் ரயில்வே சுரங்கப்பாதை உள்ளது. அப்பகுதியின் இருபுறமும் உள்ள சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், பல்வேறு தேவைகளுக்காக இப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, அங்குள்ள 25 குக்கிராமங்களுக்கும் இந்த வழியே பிரதானமாக உள்ளது. இதனிடையே ரயில்வே நிர்வாகம் அந்த பாதையை அடைக்க முயற்சி செய்து வருகிறது. இதனால், அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், பல கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்களின் நலன்கருதி, ரயில்வே சுரங்க பாதையை அடைக்கும் முடிவை கைவிட வேண்டும்,'' என்றனர்.

# மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி இயக்கம் சார்பில் மனிதம் போற்றும் உணவு திட்டம் துவக்க விழா



செஞ்சி மார்ச் 11

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வெள்ளக்குளம் பகுதியில் இயங்கி வரும் ஏபில் மழலையர் பள்ளியில் நடிகர் விஜய் சேதுபதியின் விழுப்புரம் மாவட்ட மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி இயக்கம் சார்பில் தினம்தோறும் மதிய உணவு வழங்கும் மனிதம் போற்றும் உணவு திட்டம் துவக்க விழா நடைபெற்றது.

மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி மன்ற இயக்கத்தின் மாவட்ட நிர்வாகி வல்லரசு சரவணன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் புகழேந்தி முன்னிலை வகித்தார் .

ஏபில் மழலையர் பள்ளியின் தாளாளர் ஜான் வில்லியம்ஸ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் ஏபில் பள்ளிக்கு 50 கிலோ அரிசி மளிகை பொருட்கள் வழங்கி மனிதம் போற்றும் உணவு திட்டத்தினை துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் எழில் பானுப்பிரியன் சல்மான் பிரகாஷ் கோகுல் மாயக்கண்ணன் இர்ஃபான் அசோக் புவனேஷ் வழக்கறிஞர் கமலக்கண்ணன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# திருவள்ளூர் மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் மாவட்ட காவல் நிலையங்களில் கஞ்சா வழக்குகளில் பறிப்பிழப்பு செய்யப்பட்ட வாகனங்கள் வரும் 17 ம் தேதி ஏலம் : எஸ்.பி. விவேக்கானந்த சுக்லா அறிவிப்பு :

திருவள்ளூர் மார்ச் 11: திருவள்ளூர் மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் மாவட்ட காவல் நிலையங்களில் கஞ்சா வழக்குகளில் சம்பந்தப்பட்டு பறிப்பிழப்பு செய்யப்பட்டுள்ள 5 வாகனங்களில் 2 இருசக்கர வாகனங்கள், 1 மூன்று சக்கர வாகனம், 2 ஆறு சக்கர வாகனங்கள் வருகின்ற 17.03.2026 அன்று காலை 10 மணி அளவில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு கீழ் இயங்கி வரும், எளாவூர் சோதனை சாவடி அருகே 5 வாகனங்கள் ஏலம் விடப்பட உள்ளது.

வாகனங்களை ஏலம் கேட்க வருபவர்கள் முன் வைப்பு கட்டணத் தொகையாக இருசக்கர வாகனங்களுக்கு ரூ.1,000, மூன்று சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனத்திற்கு ரூ. 5,000 செலுத்த வேண்டும்.அதற்கான டோக்கன் காலை 8 மணி முதல் 10 மணி வரை வழங்கப்படும். வாகனத்தை ஏலம் எடுத்தவர்கள் ஏலம் கேட்ட தொகையுடன் இருசக்கர வாகனத்திற்கு அரசு விற்பனை வரி 12% மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனத்திற்கு 18% உடனடியாக செலுத்தி விட வேண்டும். வாகனத்தின் விபரம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்பீட்டு தொகை கும்மிடிப்பூண்டி மதுவிலக்கு அமல் பிரிவு தகவல் அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் உரிமையாளர்கள் உரிமையாளருக்கான பதிவுச்சான்று ஆதார் கார்டு கொண்டு வரவேண்டும். மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள வருபவர்கள் ஆதார் கார்டு/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அடையாள அட்டை தவறாமல் கொண்டு வர வேண்டும். ஏலத்தில் கலந்து கொண்டு வாகனம் எடுக்காதவர்களுக்கு முன் வைப்பு கட்டணத் தொகை ஏலத்தின் முடிவில் திருப்பித் தரப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேக்கானந்த சுக்லா தெரிவித்துள்ளார்.

# தாரகைக் குறல் நூலாசிரியர் சுகந்தினாவுக்கு "அறிவுத் திருக்கோயில்" விருது கல்லூரித் தலைவர் முனைவர் வி.முத்து வழங்கி பாராட்டினார்....



தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழாவில் தாரகைக் குறள் எனும் நூலினை எழுதிய நூ நூலாசிரியர் சுகந்தினா அவர்களுக்கு கல்லூரி தலைவர் முனைவர் வி.முத்து "அறிவுத் திருக்கோயில்" எனும் விருதினை வழங்கி பாராட்டினார்.உடன் திரைப்பட நடிகை நவயுக குகராஜா,மருத்துவர் மற்றும் இயக்குனர் மாலதி நாராயண்,புதுவைத் தமிழ்ச் சங்கச் செயலர் பாவலர் சீனு.மோகன்தாசு, பனைமரங்கள் கூட்டமைப்பு தலைவர் தூத்துக்குடி தாமோதரன்,தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கவிஞர் இர.ஆனந்தராசன், கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ஏழுமலை,பொருளர் எஸ். பழனிச்சாமி ஆகியோர் உள்ளனர்.

# அனைத்து முற்போக்கு இயக்கங்கள் சார்பாக திமுக கூட்டணியை வெற்றி பெற செய்ய, திமுக அரசு கொண்டுவந்த நலத்திட்டங்களை துண்டு பிரசுங்களாக மக்களுக்கு கொடுத்து பிரசாரம் செய்தனர்!!!

கோவை: மார்ச்11

அனைத்து முற்போக்கு இயக்கங்கள் , கோவை இந்திய ஒற்றுமை இயக்கம் சார்பில் வரும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு ஆளும் திராவிட முன்னேற்ற கழக அரசு ஆதரித்து, அரசு கொண்டுவந்த நலத்திட்டங்களை சுட்டிக்காட்டி வரும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திமுக அரசு ஆட்சி கட்டிலில் அமர வைக்க பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விளக்கி பிரச்சார கூட்டம் பி.என்.புதூர் மாரியம்மன் கோவில் அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்தில் இந்திய ஒற்றுமை இயக்க மேற்கு மண்டல பொறுப்பாளர் பேராசிரியர். முனைவர். சௌ. காமராஜ் அவர்கள் பேசுகையில் வாக்காளர்கள் விழிப்புணர்வோடு ஓட்டளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அதே போல் இந்திய ஒற்றுமை இயக்க மாநிலப் பொருளாளர் மருத்துவர். டென்னிஸ் கோவில் பிள்ளை அவர்கள் பேசுகையில் பி.ஜேபி அடிமை அதிமுக கூட்டணி ஆட்சி தமிழ் நாட்டில் ஒரு வேளை வந்தால் தமிழ்நாடு மணிப்பூர் போன்ற கலவர பூமியாக மாறிவிடும் எனக் தெரிவித்தார்.

இந்நிழ்ச்சியில் புரட்சிகர இளைஞர் முன்னனித் தலைவர் மலரவன்,

அறிவாயுத பதிப்பக உரிமையாளர் பொறியாளர். செந்தில், தமிழ்நாடுசுயமரியாதை திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர். நேருதாஸ், இந்திய ஒற்றுமை இயக்கத்தின் மாநில செயல் குழு உறுப்பினர் கதிரவன், திராவிட மக்கள் இயக்கத்தை சார்ந்த ரகுபதி, தமிழக வாழ்வுரிமை கட்சியைச் சார்ந்த தங்கராஜ் என பலர் கலந்து கொண்டனர்.

# பாஜக சார்பில் சர்வதேச உலக மகளிர் தினம் நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மகளிர் அணி சார்பில் 8/03/2026 ஞாயிறு அன்று மதியம் 1.30 மணிக்கு போச்சம்பள்ளி உள்ள பாஜக கட்சி அலுவலகத்தில் மகளிர் அணி ஏற்பாட்டில் , மகளிர் மாநில செயலாளர் .ராதிகா அவர்களும் மாவட்ட தலைவர் V.S.கவியரசு.MBA. அவர்களின் தலைமையில், மகளிர் அணி மாவட்ட தலைவி சிலம்பொலி அவர்கள் முன்னிலையில் விளையாட்டு வீராங்கணிக்களுக்கு கௌரவித்து சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுசெயலாளர் ஸி.ரி.சுமதி மாவட்ட துணை தலைவர் வேங்கடஜலபதி மாவட்ட செயலாளர் சரவணன், மகளிர் அணி மாவட்ட பார்வையாளர் சரண்யா, மகளிர் அணி மாவட்ட பொது செயலாளர் கோமதி, சாந்தி பர்கூர் தெற்கு மண்டல் தலைவர் சுப்பிரமணி ஏராளமான மகளிர்கள், நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு சிறபித்தார்கள்.

# அணைக்கட்டு தொகுதியில் போட்டியிட வ.வினோத் கண்ணா விருப்ப மனு த.வா.க. தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்களிடம் வழங்கினார்



வேலூர், மார்ச்.11

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுவை தமிழக வாழ்வுரிமை கட்சியின் வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வ.வினோத் கண்ணா சென்னையில் உள்ள கட்சி அலுவலகத்தில் த.வா.க. தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ராயலூர் கண்ணன், ஜம்புலிங்கம் ஆகியோரிடம் வழங்கினார்.

அப்போது ராணிப்பேட்டை மாவட்ட த.வா.க. செயலாளர் வில்வநாதன், ஆற்காடு நகர செயலாளர் அன்பழகன், கழக பேச்சாளர் குணா, வக்கீல் தினேஷ் குமார் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421